செ.வெ.எண்: 638/2016 நாள்: 15.09.2016

**பத்திரிகை செய்தி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் தொடர்பாக செயல்பட்டு வரும் கீழ்கண்ட மாவட்ட குழுக்களின் பதவிக் காலம் முடிவடைவதால் மாவட்ட குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் தேர்வு செய்யும் பொருட்டு விருப்பமுள்ள சமூக அக்கறை கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. கொத்தடிமை தடுப்பு மற்றும் கண்காணிப்புக் குழு.
2. வன்கொடுமை தடுப்பு மற்றும் கண்காணிப்புக் குழு.
3. ஆதிதிராவிடர் நலக் குழு.
4. திடக் கழிவுகளை மனிதர்கள் அகற்றுவதிலிருந்து தடை சட்டம் அமல் படுத்தும் மற்றும் கண்காணிப்பு குழு.

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பிக்கும் நபர் சமூக அக்கறை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
2. குற்ற பின்னணி மற்றும் குற்ற தொடர்புடையவர் இல்லாமல் இருத்தல் வேண்டும்.
3. புகைப்படத்துடன் கூடிய Bio-Data வுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
4. கடந்த கால சிறப்பு செயல்பாடுகளின் அறிக்கையுடன் விண்ணப்பிக்கவும்.
5. எந்த குழுவில் சேர விருப்பப்படுகிறீர்கள் என்பதை குறிப்பிட வேண்டும்.
6. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
   மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம்,
   நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   கன்னியாகுமரி மாவட்டம்.
7. விண்ணப்பங்களை அலுவலகத்தில் நேரிலும் கொடுக்கலாம்.
8. விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 10.10.2016.

ஓம்/.சஜ்ஜன்சிங் ரா.சவான்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல்/ உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.